**குருநாகல் பிலான்டேஷன்ஸ் லிமிடட் கம்பனி - 2023**

---------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குருநாகல் பிலான்டேஷன் லிமிடட் கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 2007 இன் 07 இலக்க கம்பனி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் கம்பனி தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- கம்பனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மஞ்சள் பயிர்ச்செய்கைக்காக 2020 ஆம் ஆண்டு முதல் அடுத்த ஆண்டுகளுக்கான மொத்தத் தொகை ரூபா 8,432,049 ஆக கணக்கு வைக்கப்பட்டு இருந்தாலும், இந்தச் செலவின ஒப்பீட்டு எண்ணக்கருவின் பிரகாரம் அந்த ஆண்டுகளில் ஈட்டிய வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கப்படாது நடைமுறைச் சொத்துக்களில் பதிவு செய்யப்பட்டுள்ளமையால் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் திரண்ட வருமானம் அந்த பெறுமதியால் மிகைக் கணிப்பீட்டுக்கு உட்பட்டிருந்தது. | குருநாகல் பிளான்டேஷன் லிமிடட்டினால் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் குறுகிய கால செயற்திட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினமாக ரூபா 8,432,049 மீதி ஆண்டின் இறுதியில் காணப்பட்டது. அந்தந்த திட்டங்கள் பலனளிப்பதால் மேற்கண்ட செலவுகள் இலாபத்திற்கு எதிராக சீராக்கப்பட்டுள்ளது. | குறுகிய காலப் பயிரான மஞ்சள் சாகுபடிக்கு ஆகும் செலவை, ஒப்பீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆண்டுகளில் ஈட்டப்பட்ட வருமானத்தில் ஈடுசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் II பகுதியின் உபபிரிவு (5)(1) | ஊழியர் ஒருவர் ஓய்வு பெற்ற போது அல்லது இறந்த நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் பணிக்கொடைத் தொகை அந்த ஆளுக்கு அல்லது அவரின் அல்லது அவளின் மரபுரிமையாளர்களுக்கு செலுத்த வேண்டியிருந்த போதிலும், கம்பனியின் 2023 ஆம் ஆண்டுக்கான ரூபா 1,251,575 ஆன செலுத்த வேண்டிய பணிக்கொடை காணப்பட்டதுடன், அதில் 180 நாட்களை விட கூடிய செலுத்த வேண்டிய பணிக்கொடை மீதி ரூபா 680,410 தொகையாக இருந்தது. அவ்வாறே, அதற்கு முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவை பணிக்கொடை தொகை ரூபா 1,073,558 ஆக காணப்பட்டதுடன், உரிய தினத்தில் செலுத்தாமையால் 2023 ஆண்டு இறுதியளவில் ரூபா 9,000,748 இற்கான மிகை விதிப்பொன்றும் செலுத்த வேண்டியிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் இறுதியில் உரிய திகதியில் பணிக்கொடை செலுத்தாமையின் அடிப்படையில் மிகை விதிப்பாக ரூபா 19 மில்லியன் கம்பனிக்கு செலுத்த நேர்ந்திருந்தது. அந்த நிலைமை ஏற்படுவதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தினால் 2016/04/19 ஆந் திகதி அனுப்பப்பட்ட வினாவின் அடிப்படையில் பணிப்பாளர் சபையால் எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள் உச்ச நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதன்படி, பணிக்கொடை வழங்குவதற்கு முன்பு செயல்படுத்தப்பட்ட அதே முறையை மீண்டும் கம்பனியால் அமுல்படுத்தப்பட வேண்டும். | கணக்காய்வின்போது வெளியிடப்படுகின்ற ஐயவினா என்பது தகவல் கோரப்படுவதற்கு மட்டுமே என்பதுடன் அதன் அடிப்படையில் பணிக்கொடை கொடுப்பனவை நிறுத்துவதற்குப் பதிலாக உரிய சட்ட நிலைமை தொடர்பாக முறையான கவனத்துடன் முடிவெடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2010 திசெம்பர் 01 ஆந் திகதிய KP/2010/22 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கை | மாகாண தோட்டக் காரியாலயங்களில் பெறப்பட்ட பணம் ரூபா 50,000 இனை தாண்டிய போது பணத்தை உடனடியாக வங்கியில் செலுத்த வேண்டும் எனினும், நாரம்மல மற்றும் தம்பதெனிய மாகாண தோட்ட அலுவலகங்களின் பௌதீக பரிசோதனையின் போது, கையிருப்பிலுள்ள காசு முறையே ரூபா 278,923 மற்றும் ரூபா 265,330 ஆகும். | தோட்டங்களின் நடைமுறைக் காரணங்களால், மாத இறுதியில் அதிக அளவு காசு கையிருப்பில் தக்கவைக்கப்பட்டுள்ளதுடன், எங்களால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளின்படி எதிர்காலத்தில் கையிருப்பில் உள்ள பணத்தின் அளவை பராமரிக்குமாறு தோட்டங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | உள்ளக சுற்றறிக்கைகளை சரியாக தயாரித்து அவற்றை நடைமுறைப்படுத்தவும், முறையான ஒப்புதல்களின் அடிப்படையில் அந்த சுற்றறிக்கைகளை திருத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 476.61 மில்லியன் இலாபம் ஒன்று காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 472.37 மில்லியன் ஆனமையால், முன்னைய ஆண்டுக்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதிப் பெறுபேறுகள் ரூபா 4.24 மில்லியனால் அதாவது 1 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதற்காக மீளாய்வாண்டின் போது நுகர்வு உயிரியல் சொத்துக்களின் கொண்டு செல்லும் பெறுமதியின் அடிப்படையில் இலாபம் ரூபா 56.53 மில்லியனால் அதிகரித்தமையும், இறப்பர் மரங்களின் விற்பனை வருமானம் ரூபா 18.8 சதவீதத்தினால் அதிகரித்தமையும் பிரதானமான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

| | 2023 (ரூபா) | 2022 (ரூபா) | விலகல் (ரூபா) | விலகல் சதவீதம் % |
|---|---|---|---|---|
| வருமானம் | 1,010,951,819 | 1,065,494,048 | (54,542,229) | 5 |
| நிதி மற்றும் ஏனைய வருமானங்கள் | 360,781,268 | 254,961,766 | (105,819,502) | 42 |
| விற்பனைக் கிரயம் | 563,224,713 | 549,558,623 | (13,666,090) | 2 |
| நிர்வாகச் செலவினம் | 226,833,617 | 223,251,034 | (3,582,584) | 2 |
| நிதிச் செலவினம் | 47,244,012 | 36,106,755 | (11,137,257) | 31 |

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

- மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நடைமுறை விகிதம் மற்றும் விரைவுச் சொத்து விகிதம் 5:1 ஆக மற்றும் 5:1 ஆக காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டின் போது அந்த விகிதாசாரம் 4:1 மற்றும் 4:1 ஆக காணப்பட்டது.

- மீளாய்வாண்டின் மொத்த இலாப விகிதாசாரம் 44 சதவீதமாக காணப்பட்டதுடன், கடந்த ஆண்டின் போது அந்த விகிதாசாரம் 48 சதவீதத்துடன் ஒப்பிடும் போது மொத்த இலாப விகிதாசாரம் 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

- மீளாய்வாண்டின் போது தேறிய இலாப விகிதாசாரம் 47 சதவீதமாக காணப்பட்டதுடன், கடந்த ஆண்டில் அந்த விகிதாசாரம் 44 சதவீதத்துடன் ஒப்பீடு செய்யும் போது தேறிய இலாப விகிதாசாரம் 3 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் தம்பதெனிய மாகாண தோட்டத்தின் அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 6,500,000 மதிப்பீடு தயாரிக்கப்பட்டது, ஆனால் 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை ரூபா 7,038,605 தொகை அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டுள்ளதுடன், மதிப்பிடப்பட்ட பெறுமதியை விட ரூபா 538,605 அதிகரிப்பு என்பதும், கட்டிடத்தின் பணிகள் இதுவரை முடிவடையாமையால் செலவு மேலும் அதிகரிக்கக்கூடும் என அவதானிக்கப்பட்டது. மதிப்பிடப்பட்ட செலவினங்களைத் தாண்டிச் செலவு செய்ததற்கான ஒப்புதலும் பெறப்படவில்லை. இந்த கட்டுமானம் தொடர்பாக மூலப்பொருள் மதிப்பீடு தயாரிக்கப்படவில்லை என்பதுடன், அதற்குரிய அளவிடைப் பத்திரங்கள் மூலம் செலவுகள் உறுதி செய்யப்படவில்லை. | இதற்கான அளவிடைப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், பொருள் மதிப்பீடு தயாரிக்கப்படவில்லை. எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான பொருள் மதிப்பீட்டைத் தயாரிக்க அறிவுறுத்தப்பட்டது. தேவைக்கேற்ப பொருட்கள் வாங்கப்பட்டு, அந்த பொருட்கள் இருப்பு புத்தகத்தில் உள்ளிடப்பட்டு வெளியீட்டு குறிப்புகளைப் பயன்படுத்தி பயன்படுத்தப்படுகின்றன.<br><br>கடந்த காலங்களில் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலையில் அசாதாரண அதிகரிப்பு காரணமாக, இங்கு வேலைகளை முடிக்க கூடுதல் பணம் செலவிட வேண்டியிருந்தது. | கட்டுமானப் பணிகளுக்கான அளவிடைப் பத்திரங்கள் மற்றும் பொருள் மதிப்பீட்டைத் தயாரித்து அதற்கேற்ப தேவையான பொருட்கள் மற்றும் அளவுகளை வாங்குவதன் மூலம் செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 டிசம்பர் 31 இல் உள்ளபடியாக தென்னை உற்பத்திகளின் கடன் பட்டோர் மீதியான ரூபா 63,510,576 தொகையினுள் 03 மற்றும் 08 ஆண்டுகளைத் தாண்டிய முறையே ரூபா 1,688,527 மற்றும் ரூபா 4,677,838 கடன் பட்டோர் மீதிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்தக் கடன் பட்டோரிடமிருந்து கடனை வசூலிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நீண்ட கால கடன் பட்டோர் மீதிகளை வசூலிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பௌதீக பரிசோதனையின் போது, ஹிரியால மாகாண தோட்ட அலுவலகத்திற்கு சொந்தமான 07 தோட்டங்களை நிறுவுவதற்காக 2023 டிசெம்பர் மாதம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 974,500 பெறுமதியான CCTV கமரா உபகரணங்கள் உத்தேசிக்கப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்படவில்லை மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படாது கனேவத்த களஞ்சியத்தில் காணப்படுகிறது என்பது அவதானிக்கப்பட்டது. | இந்த பொருத்துகள் தோட்ட அதிகாரியால் மேற்கொள்வதால் தாமதித்துள்ளது. அதனை யூன் 15 ஆந் திகதி நிறைவு செய்ய அவர் இணங்கியுள்ளார். | CCTV கேமரா கருவிகள் நிலையான சொத்து பதிவேட்டில் சேர்க்கப்பட வேண்டும் மற்றும் நோக்கம் கொண்ட பணிகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |